அதேபோல பல்வேறு சாதனைகளை வனத்துறையிலே நாம் இன்றைக்கு செய்து கொண்டு இருக்கிறோம். மேலும் வனத்துறை இன்றைக்கு சிறப்பான முறையிலே செயலாற்றிக் கொண்டு இருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சந்தனக் கடத்தலைப் பொறுத்தவரையிலும் இன்றைக்கு தடுக்கப்பட்டிருக்கிறது. 1985-லேயிருந்து 1991-வரையிலும் குற்றங்களின் எண்ணிக்கை *5,132;* பிடிபட்ட சந்தனக் கட்டைகளின் மதிப்பு 18 கோடியே 82 இலட்சமாகும். பிடிபட்ட வாகனங்களின் எண்ணிக்கை 1,167, ஆனால் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு குற்றங்களுடைய எண்ணிக்கை 9,690. அவ்வளவு பேர்களை நாம் பிடித்து இருக்கிறோம். சந்தனக் கட்டைகள் மட்டும் ஏறத்தாழ 45 கோடியே 22 இலட்சம் ரூபாய்க்கு பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறது. 2313 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டிருக்கின்றன என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியத் துணைக் கண்டத்தின் வரலாற்றில் குண்டர் சட்டத்தின்கீழ், சந்தனக் கட்டைகளை பல்வேறு வனப் பொருள்களை யார் களவாடிச் சென்றாலும் அவர்களை குண்டர் சட்டத்திலே 1991-லே இருந்து 1995 வரையிலும் 474 பேர்களை குண்டர் சட்டத்தின்கீழ் கைது செய்தது. நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அரசு என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நீங்கள்கூடப் பார்த்திருப்பீர்கள், ஒருமாத காலத்திற்கு முன்னாலே ஒரு பத்திரிகையிலே ஒரு செய்தி வந்தது. அது முரசொலி பத்திரிகை. அவர்கள் இங்கே இல்லை. அவர்கள் இங்கே இருந்தால் நான் இந்த பதிலைச் சொல்லலாம் என்று கருதினேன். இருந்தாலும் கூட...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர், நான் அவைக்கு ஒரு அறிவிப்பைக் கொடுத்து விடுகிறேன். பிறகு நீங்கள் பதிலுரையைத் தொடரலாம்.

7. அறிவிப்புகள்-தொடர்ச்சி

(இ) பேரவை அலுவல்கள் குறித்து அலுவல் ஆய்வுக்குழு எடுத்த முடிவுகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவின்படி நாளையிலிருந்து

பேரவையின் அலுவல்கள் கீழ்கண்டவாறு அமையவேண்டுமென முடிவெடுக்கப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாளை 18-4-1995. (செவ்வாய்க்கிழமை)		கோரிக்கை எண்.35-பாசனம்
		36-பொதுப்பணிகள் - கட்டிடங்கள்
		37-பொதுப்பணிகள்-பணியாளரமைப்பும், கருவிகளும், தளவாடமும்
		38-சாலைகளும் பாலங்களும்
		54-பாசனம் குறித்த மூலதனச் செலவு
		55-பொதுப் பணிகள் -கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு
		56-சாலைகள்-பாலங்கள் குறித்த மூலதனச் செலவு.
19-4-1995 (புதன்கிழமை)	காலை மற்றும் மாலை இரு வேளை-களிலேயும் சேர்ந்து.	கோரிக்கை எண்/20 -வேளாண்மை
		கோரிக்கை எண்.52-வேளாண்மை குறித்த மூலதனச் செலவு.
		கோரிக்கை எண். 10 பால் வழங்கு திட்டங்கள்
		கோரிக்கை எண். 22-கால்நடை வளர்ப்பு

காலையும் மாலையும் இந்த 4 மானியக் கோரிக்கைகள் மீதும் விவாதம் நடைபெறும்.

20-4-1995 (வியாழக்கிழமை)	கோரிக்கை எண்.27-ஊரக வளர்ச்சி
	கோரிக்கை எண்.48 குடிநீர் வழங்கல்
	கோரிக்கை எண்.49-நகராட்சி நிர்வாகம்.
பிற்பகல் 2-10	
21-4-1995 (வெள்ளிக்கிழமை)	கோரிக்கை எண் 4-பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும் நிருவாகம்.

22-4-1995 (சனிக்கிழமை) 23-4-1995 (ஞாயிற்றுக்கிழமை)	விடுமுறை	
24-4-1995 (திங்கட்கிழமை)	காலை மற்றும் மாலை இருவேளை களிலேயும் சேர்ந்து.	கோரிக்கை எண். 24 - தொழில்கள் கோரிக்கை எண்.53 - தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு 47 - ஊரகத் தொழில்கள் 59 - ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு. 26 - கதர்-கிராமத் தொழில்கள்.
25-4-1995 (செவ்வாய்க்கிழமை)	காலை	கோரிக்கை எண் 13 - நீதி நிருவாகம் 14 - சிறைச்சாலைகள்
	மாலை	கோரிக்கை எண் 12 - தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு இந்து சமய - அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம்.
26-4-1995 (புதன்கிழமை)	காலை மற்றும் மாலை	கோரிக்கை எண். 17 கல்வி கோரிக்கை எண்.51 - தமிழ் வளர்ச்சி பண்பாடு
27-4-1995 (வியாழக்கிழமை)	காலை	கோரிக்கை எண். 29 - சமூகநலன்
	மாலை	கோரிக்கை எண். 28 - தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்.
28-4-1995 (வெள்ளிக்கிழமை)		கோரிக்கை எண். 32 - வீட்டு வசதி கோரிக்கை எண். 33 - நகர்ப்பகுதி வளர்ச்சி
29-4-1995 (சனிக்கிழமை) 30-4-1995 (ஞாயிற்றுக்கிழமை)	விடுமுறை	

1-5-1995 (திங்கட்கிழமை)		மே நாள் - விடுமுறை
2-5-1995 (செவ்வாய்க்கிழமை)	காலை	கோரிக்கை எண். 31 - பிற்படுத்தப் பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் நலன்
	மாலை	கோரிக்கை எண். 50 - சுற்றுலா
3-5-1995 (புதன்கிழமை)	காலை	கோரிக்கை எண். 23 - கூட்டுறவு
	மாலை	கோரிக்கை எண். 21 - மீனளம்
4-5-1995 (வியாழக்கிழமை)	காலை	கோரிக்கை எண். 30 - பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன்.
	மாலை	கோரிக்கை எண். 46 - செய்தி திரைப்படத் தொழில் நுட்பவியல்.
5-5-1995 (வெள்ளிக்கிழமை)		25 - கைத்தறியும், துணித் தொழிலும்.
6-5-1995 மற்றும் 7-5-1995	சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை	விடுமுறை.
8-5-1995 (திங்கட்கிழமை)		கோரிக்கை எண். 9 - மாநில ஆட்சித் தலைவர் அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்.
		7 - மாநிலச் சட்டமன்றம்
		8 - தேர்தல்கள்
		41 - ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும்.
		42 - பல்வகை
		60 - பல்வகை மூலதனச் செலவு
		61 - மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்.
		1995-96-ம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும் மற்றும் முடிவு பெறாத மானியக் கோரிக்கைகள் ஏதுமிருப்பின் அவற்றைப் பொறுத்தவரை விவாதமின்றி அன்று

1995 ஏப்ரல் 17] [பேரவைத் தலைவர்]

வாக்கெடுப்பு சரியாக 1.30 மணிக்கு எடுக்கப்பட வேண்டும்.

வாக்கெடுப்பிற்குப் பின் 1995-96-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளுக்கான நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல்.

9-5-1995 (செவ்வாய்க்கிழமை)	1995-96-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளுக்கான நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு மற்றும் அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தலும், நிறைவேற்றலும்.
10-5-1995 (புதன்கிழமை)	அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தலும், நிறைவேற்றுதலும்.
11-5-1995 (வியாழக்கிழமை)	பக்ரீத் - விடுமுறை
12-5-1995 (வெள்ளிக்கிழமை)	அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தலும், நிறைவேற்றலும்.
13-5-1995 மற்றும் 14-5-1995	சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை ஆகியவை விடுமுறையாகும்.

தேவையிருப்பின் 15-5-1995 திங்கட்கிழமையும் சபை கூடும்.

காலை, மாலை ஆகிய இரு வேளைகளிலேயும் சட்டமன்றம் கூடும் நாட்களில் காலை சட்டமன்றம் 1.30-க்கு முடிவு பெற்று, அதாவது 10 மணிக்கு ஆரம்பித்து 1-30-க்கு முடிந்து பின்னர் மீண்டும் 4 மணிக்குக் கூடி மானியக் கோரிக்கைகள் நிறைவேறும் வரை இரவில் நடைபெறும்.

பிற்பகல் 2-15

9. மானியக்கோரிக்கைகள், 1995-96, விவாதமும் வாக்கெடுப்பும் - தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6-3-1995-ஆம் நாள் முந்திரி, பனை மகசூலை